அவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சிறைச்சாலையிலிருந்து இங்கு அவர்கள் காவல் துறையினரோடு அல்லது காவல் துறையினரின் பாதுகாப்போடு வருவது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுடைய பெருமைக்கும் சரியானது என்பதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. அதுமட்டுமல்ல இப்போது காவல் துறை என்றாலே மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள முடியாத சூழ் நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அவராகவே வருவதற்குரிய வாய்ப் புகள் சட்டப்படி இருக்கின்றன. சட்டப்படியுள்ள அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கு மாறாக தலைவரவர்களின் மூலமாக மேலவையின் மூல மாக வெளியிலே நடைபெற்றிருக்கிற ஒரு காரியத்திற்கு தங்களைத் தலையிடச் சொல்வது அல்லது இந்த அவையை தலையிடச் சொல்வது எந்த வகையிலும் நியாயமானதல்ல.

3. கவன ஈர்ப்பு.

(1) பட்டதாரி ஆசிரியர் கழகம் 9 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்டத் தலைநகரங்களில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திருவாளர்கள் க. மீனாட்சிசுந்தரம் மற்றும் பா. ரா. தாமஸ் ஆகியோர் கவன ஈர்ப்பு முன்னறிவிப்பு கொடுத்துள் ளார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"பட்டதாரி ஆசிரியர் கழகம் 9 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்டத் தலைநகரங்களில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியதும், தொடர் நடவடிக்கையாக மீண்டும் போராட்டம் நடத்தவிருப்பதுமான நிலையில் ஆசிரியர், மாணவர், பொது மக்களிடையே தோன்றியுள்ள பதட்ட நிலை குறித்து".

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : விவர அறிக்கை@ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

@209-2 2 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது

திரு. க. மீனாட்சிசுந்தரம்: பொதுவாக ஆசிரியர்கள் எந்தத் துறையில் பணி புரிந்து தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்யப்பட்டாலும், அவர்களுக்குப் பிழைப்பு ஊதியம் தரப்படுகின்ற ஒரு முறை நடைமுறையில் இருந்து வருகிறது. ஊராட்சித் துறை, அரசுத் துறை அனைத்திலும் இந்தச் சலுகை இருந்து வருகிறது. ஆனால், தனியார் துறை ஆசிரியர்களுக்கு இந்தப் பிழைப்பு ஊதியம் வழங்கப்படவில்லை. இந்தக் கோரிக்கை வருங்காலத்தில் நிறைவேற்றப்படும் என்கிற வகையில் தற்காலிக பணிநீக்கம் செய்யும் ஆசிரியர்களுக்குப் பிழைப்பு ஊதியம் ஒழுங்காகக் கொடுக்கப்பட வழிவகை செய்யும் முறையில் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன்முறைப் படுத்தும்) விதிகள், 1974 திருத்தப்பட இருக்கிறது என்று இதிலே தரப்பட்டிருக்கிறது. அதைக் காலதாமதம் இல்லாமல் விரைவிலே, அண்மையிலே நிறைவேற்றுவார்களா என்பதை அவைக்கு அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) விதிகள், 1974 பரிசிலிக்கப்பட்டு திருத்தப்பட இருக்கிறது. அதை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: இளநிலை ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாக ஆக்குகின்றபோது ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் திங்கள் 1 ஆம் தேதி யார் யார் இடைநிலை ஆசிரியர்களாகத் தகுதி பெற்றிருக்கிறார்களோ அவர்கள் எல்லோருக்கும் தகுதி அடிப்படையில் இடைநிலை ஆசிரியர்களுக்கான ஊதியம் தரப்பட வேண்டும் என்பது அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. அதேபோல, இடைநிலை ஆசிரியர்களாக இருப்பவர்கள் பி.டி. தகுதி பெற்றிருந்தால், அவர்களுக்கு பி.டி. ஆசிரியர்களுக்கான ஊதியம் தரப்பட வேண்டுமென்ற கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. அப்படி பி.டி. தகுதி பெற்ற ஆசிரியர்கள் இடைநிலை ஆசிரியர்களாக இருப்பது கல்வியின் தரத்தை உயர்த்த உதவிபுரிவதாக இருக்கும். இப்போது இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து ஏற்றுக் கொள்ளப்படாவிட்டாலும் கூட, வருங்காலத்திலாவது இளநிலை ஆசிரியர்கள் இடைநிலை ஆசிரியர்களுக்குரிய தகுதி பெற்றிருந்தால், இடைநிலை ஆசிரியர்களுக்குரிய ஊதியத்தை வழங்குவதைப்போல் இவர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் ஒரு தேதியைக் குறிப்பிட்டு அந்தத் தேதியிலிருந்து இந்தச் சலுகையை வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

138 பட்டதாரி ஆசிரியர் கழகம் 9 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்டத் தலைநகரங்களில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியது குறித்து

[1981 பிப்ரவரி 27

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். இளநிலை ஆசிரியர்கள் இடைநிலை ஆசிரியர்களுக்குரிய தகுதியைப் பெற்று, இடைநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டு அந்த ஊதியத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இடைநிலை ஆசிரியருக்கான வேலையைச் செய்து கொண்டு பயனை அனுபவிக்கிறார்கள். அதற்குரிய வகையில் உத்தரவு போட்டிருக்கிறோம். அந்த அடிப்படை இதிலே இல்லவே இல்லை. இருக்கின்ற வேலையில், தகுதிக்கேற்ற சம்பளம் கொடுப்பது என்பது அரசுத் துறையிலே எங்குமே ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்று.

(2) தென்னாற்காடு மாவட்டம், வடலூரிலுள்ள நெய்வேலி சிராமிக் தொழிற்சாலை மூன்று மாதங்களுக்கு மேலாகக் கதவடைப்பு செய்யப் பட்டுள்ளது குறித்து.

* **திரு. ஆ. நல்லசிவன் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"தென்னாற்காடு மாவட்டம், வடலூரிலுள்ள நெய்வேலி சிராமிக் தொழிற்சாலை நிர்வாகம், தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்க மறுத்தும், தொழிலாளர் இலாகா அதிகாரிகளின் ஆலோசனைகளை ஏற்க மறுத்தும், தொழிற்சாலையை மூன்று மாதங்களுக்கு மேலாகக் கதவடைப்பு செய்துள்ளது குறித்து".

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. நல்லசிவன் : இந்தப் பிரச்சினை குறித்து நேற்று நடைபெறுவதாக இருந்த பேச்சுவார்த்தை நடைபெற்றதா? உடன்பாடு ஏதாவது ஏற்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : லேட்டஸ்ட் இன்பர்மேஷன். நேற்று பேச்சுவார்த்தை நடந்தது. மேலும் நடைபெறுவதாக இருக்கிறது. தொடர்ந்தும் நடைபெறும். பேச்சுவார்த்தை நடத்துபவர் ஜாயின்ட் கமிஷனர் ஆஃப் லேபர் திரு. ராஜா சுப்பிரமணியம்.

@213-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.